(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 51.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 மே 09, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ ரி. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமசந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ வருண லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

**கௌரவ ஜகத் விதான**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ அரவிந்த செனரத்**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— “2025 மே 08 ஆந் திகதி கௌரவ ரவீந்திர பண்டார அவர்களால் இச்சபையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்கப்பட்ட வாய்மூல விடைக்கான வினாவிற்கு, பிரதி அமைச்சர் பதிலளித்த பின்னர் மேற்படி உறுப்பினர் ஒரு குறைநிரப்புக் கேள்வியை மட்டும் கேட்பதாகக் குறிப்பிட்டு அந்தக் கேள்வியை கேட்டதன் பின்னர், ‘33(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்படி, 32 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் விடையின்மீது எவரேனும் உறுப்பினர் இரண்டிற்கு மேற்படாத குறைநிரப்புக் கேள்விகளைக் கேட்கலாம்’ என்ற வாசகத்தைப் பயன்படுத்தி, வேறு உறுப்பினர் ஒருவர் அந்தக் கேள்விக்கான குறைநிரப்புக் கேள்வியொன்றைக் கேட்பதற்கு முற்பட்டபோது உருவான நிலைமை பற்றி இச்சபைக்குத் தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

‘ 32(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்படி, வாய்மூல விடையினைக் கோரும் கேள்வியொன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில், ஒழுங்குப் பத்திரத்தில் அக்கேள்விக்குரிய முறை வந்ததும் சபாநாயகர் அக்கேள்விக்குரிய உறுப்பினரின் பெயரை அழைக்க வேண்டும்; அவ்வண்ணம் அழைக்கப்பட்ட உறுப்பினர் தமது இடத்தில் எழுந்து நின்று ஒழுங்குப் பத்திரத்திலுள்ள அக்கேள்வியின் இலக்கத்தைக் குறிப்பிடுவதன் மூலம் கேள்வியினைக் கேட்டல் வேண்டும்.’

மேலும், '33(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்படி, 32 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் விடையின்மீது எவரேனும் உறுப்பினர் இரண்டிற்கு மேற்படாத குறைநிரப்புக் கேள்விகளைக் கேட்கலாம்: ஆயினும், அத்தகைய குறைநிரப்புக் கேள்விகள், தொடக்கக் கேள்வில் உள்ளடக்கப்படாத விடயங்களை அறிமுகப்படுத்தலாகாதென்பதுடன், வாய்மொழிமூலமான விடையிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயத்தை மேலும் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே கேட்கப்படுதலும் வேண்டும்.'

இதன் போது 'எவரேனும் உறுப்பினர்' என்பது வினா எந்த உறுப்பினரின் பெயரில் வெளியிடப்பட்டுள்ளதோ அந்த உறுப்பினரையே குறித்துரைகின்றது என்பதுடன், அந்த உறுப்பினருக்கு மட்டுமே இரண்டுக்கும் மேற்படாத குறைநிரப்பு வினாக்களைக் கேட்க முடியும்.

எவ்வாறாயினும், கேள்வி வெளியிடப்பட்டுள்ள உறுப்பினர் அறிந்திருக்கத்தக்கதாகவும் அவரின் அனுமதியுடனும் மட்டும் வேறு உறுப்பினர் ஒருவருக்கு குறைநிரப்புக் கேள்விகளைக் கேட்கும் மரபு காணப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் கேள்வியைக் கேட்டிருந்த உறுப்பினர் அறிந்திராத நிலையிலும் அத்துடன் அவரின் அனுமதியின்றியும் வேறு உறுப்பினர் ஒருவர் குறைநிரப்புக் கேள்வி ஒன்றைக் கேட்க முற்பட்டதால், அச்சந்தர்ப்பத்தில் குறைநிரப்புக் கேள்வியைக் கேட்பதற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு வாய்ப்பளிக்கவில்லை என்பதை இச்சபைக்கு அறிவிக்கின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் —

(i) 2021 ஆம் ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2023 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆண்டறிக்கை;

(iv) 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய லொத்தர் சபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(v) 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் —

(i) 2023 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2023 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்; மற்றும்

(iv) 2023 ஆம் ஆண்டுக்கான களனி பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) ஆம் பிரிவின் கீழ் உருகுணை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பதிலாக 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில், தகுதிவாய்ந்த அதிகாரியாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர்.எம்.யூ.எஸ்.கே. ரத்நாயக்க அவர்களை நியமித்தல் தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2425/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தி அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2021/2022 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) வஸ்கடுவ, குடா வஸ்கடுவ, காலி வீதி எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.ரீ.பீ. த சில்வாவினது 2025.01.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வெலிபன்ன, ஹிஜரா வத்த, இல. 88/டி யில் வதியும் திருமதி எச்.எஃப். எஃப். பஸ்மியாவினது 2025.01.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) மத்தேகொட, மத்தேகொட வீதி, ‘சம்பத் உயன’, இல. 9/1 இல் வதியும் திரு. சுனில் விதான ஆரச்சியினது 2025.01.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அஜித் பி. பெரேரா சமர்ப்பித்தார்.

(2) ஹிம்புட்டான, ஜயந்தி மாவத்தை, இல. 276/4 டி யில் வதியும் திரு. ஓ.எம்.டி. கெமுனுவினது 2025.02.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி சமர்ப்பித்தார். .

(3) பலபிட்டிய, புகையிர நிலைய வீதி, இல. 65 இல் வதியும் திரு. பி.யூ.பி. குமார த சில்வாவினது 2024.12.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா சமர்ப்பித்தார்.

(4) (i) மஹரகம, பிலியந்தல வீதி, நுக கஹ பிரதேசம், இல. 39/43 இல் வதியும் திரு. ஜி.பி.எச். விஜயசேனவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பிலியந்தல, வேவல, கங்காராம வீதி, இல. 2/1 ஏ யில் வதியும் செல்வி ஜி. சமன்தி த சில்வாவினது 2024.12.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) தலங்கம, தெற்கு தலங்கம, இல. 613/ஏ இல் வதியும் திருமதி டப்ளியூ. சீலா காந்தியினது 2025.02.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌர தேவானந்த சுரவீர சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. *சிறப்புரிமை:*** கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன அனுவதிக்க கௌரவ கயந்த கருணாதிலக்க பின்வருமாறு பிரேரித்தார்,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாமர சம்பத் தசனாயக அவர்கள் 2025 மார்ச் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. *சட்டமூலம் கொண்டுவர அனுமதி:*** ''மாபொட்டுவன ஸ்ரீ பியரத்தன தேரர் சுவசெவன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்'' எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர பிரேரித்தார். கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

(மு.ப 11.19 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**7. இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல்:** கௌரவ சுரங்க ரத்நாயக்க அனுவதிக்க கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகள் தொடர்பில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் இந்நாட்டின் சமூகத்திலும் உரையாடல் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொது மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல், அகற்றுதல் அல்லது அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல உறுப்பினர்களிடமிருந்தும் நியாயமான பதிலை பாராளுமன்றத்தில் விவாதித்துப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 2/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது அரச துறையின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ சமிந்த விஜேசிறி அனுவதிக்க, கௌரவ ரோஹண பண்டார பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்கின்ற செயல்முறையானது ஒரு சிலரின் கைகளில் உள்ள நிலையில் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்ற காரணத்தினால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரச துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 12/2024]

(பி.ப 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ முஜிபுர் ரஹுமான் அனுவதிக்க, கௌரவ சமிந்த விஜேசிறி பின்வருமாறு பிரேரித்தார்,— அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் நிகழும் பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பான விடயங்கள் கணக்காய்வறிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதால், அரச நிறுவனங்களில் அவ்வாறான ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் பொருட்டு அவ்வறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 19/2024]

(பி.ப 1.58 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடு ஒன்றை வழங்குதல்:** கௌரவ ஜே.சீ. அலவத்துவல அனுவதிக்க, கௌரவ ரவி கருணாநாயக்க பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் வாழ்வதற்கான வீடு ஒன்றிற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும் என்ற காரணத்தால் பிரதான குடியிருப்பாளரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக வீடு ஒன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு அல்லது வாடகைக்குப் பெறுவதற்கு அவரை வலுவூட்டுவதன் மூலம் அவருக்கு வசதிசெய்து கொடுத்தல் அவசியமாகும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 25/2024]

"கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன தலைமை தாங்குவாராக" தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.06 மணிக்கு கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. பொது போக்குவரத்து தர நிர்ணயங்களுக்கமைவான பேருந்துகளை மாத்திரம் நாட்டுக்கு கொண்டு வருதல் தொடர்பான சட்டங்களை ஆக்குதல்:** கௌரவ தினிந்து சமன் அனுவதிக்க, கௌரவ ரவீந்திர பண்டார பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்துகளும் தனியார் துறை பேருந்துகளும் போக்குவரத்துக்கு தகுந்த நிலைமையில் காணப்படாமையினாலும், குறித்த பேருந்துகளில் அதி கூடிய பேருந்துகள் லொறி அடிச்சட்டங்கள் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளவை என்பதாலும், எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் துறைக்கு பேருந்துகளை இறக்குமதி

செய்கையில் பயணிகள் போக்குவரத்துக்கு வடிவமைக்கப்பட்ட, பயணிகள் சௌகரியத்துக்கு உகந்த, பொது போக்குவரத்து தர நியமங்களுக்கமைவான பேருந்துகளை மாத்திரம் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு ஏதுவான சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 37/2025]

“கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக” நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 4.06 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. இலங்கையில் "அபிவிருத்தி முன்மொழிவுகள்" என்ற பெயரில் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள எனினும் எவ்வித பயன்பாடுகளுக்கும் உட்படுத்தப்படாத அனைத்து கட்டிடங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்:** கௌரவ நிஷாந்த பெரேரா அனுவதிக்க, கௌரவ லால் பிரேமநாத் பின்வருமாறு பிரேரித்தார்,— வெளிநாட்டு உதவி அல்லது வெளிநாட்டுக் கடனுதவி அடிப்படையில் அல்லது மத்திய அரசு அல்லது உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிதியைச் செலவிட்டு “அபிவிருத்தி முன்மொழிவுகள்” என்ற பெயரில் நாடு முழுவதும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் இதுவரை நிர்மாணிக்கப்பட்டு, எனினும் எவ்வித பயன்பாடுகளுக்கும் உட்படுத்தப்படாத அவ்வாறான கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகிக்க முடியுமான வகையில் மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான முடிவுகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 38/2025]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. ஒத்திவைப்பு:** “இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக”என நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

அப்பொழுது, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 மே 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.